**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS** (Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.314/2020**

| Deposition of Name | ரவி | Prosecution | LW-4 as PW4. |
|---|---|---|---|
| Father Name | செல்வராஜ் | Defence | |
| Village | உடையான்பள்ளம் . | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 32/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **18.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்க வில்லை .

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 01.06.2019 ம் தேதி இரவு 9.00 மணிக்கு நான் எனது வீட்டில் டிவி பார்த்துக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் அசா.1 யை தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியும், இளநீர் வெட்டும் அறுவாள் மற்றும் இரும்பு பைப்பால் அசா.1யை தாக்கி வலது கை சுண்டு விரல், தலை, முதுகு ஆகிய இடங்களில் வெட்டி அசா.2 மற்றும் அசா.3க்கு இரத்த காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**